பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 19 ஞாயிற்றுக்கிழமை 06.11.2022 கதிர் 253


## 15 தமிழக மீனவர்களை சிறைப்பிடித்த கடற்படை

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, இரண்டு படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தலைமன்னார் கடற்பரப்பில் கடற் படையினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் 2

# போராட்டச் சிந்தனையை இளைஞர்களிடத்தில் மழுங்கடிக்கும் நோக்குடன் போதை விற்பனை



### விக்னேஸ்வரன் எம்.பி. பலத்த சந்தேகம்

**தமிழரின் உரிமைப் போராட்டம் குறித்த சிந்தனையை இளைஞர்களிடத்தில் மழுங்கடிக்கும்நோக்குடன் போதைப் பொருள் விற்பனையையும், பாவனையையும் வடக்கு மாகாணத்தில் வேரூன்றச் செய்கின்றார்களா என்ற சந்தேகம் என்னிடம் இருக்கின்றது.** 8

## ஆர்ப்பாட்டங்களை நடத்தி பலவீனத்தைக் காட்டாதீர்!

### எதிரணியைக் கிண்டலடிக்கும் தினேஷ்



அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தி உங்கள் பலவீனங்களைக் காட்ட வேண்டாம் என்று எதிர்க் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார் 8

## கால்வாயைக் கடந்த சிறுமி நீரில் மூழ்கி பரிதாபச் சாவு!

### கொத்மலையில் சோகம்

நுவரெலியா, கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெதமுல்ல தோட்டத்தில் 10 வயது சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி அந்தப் பகுதியில் உள்ள 'கெமில்டன்' கால்வாயைக் கடக்க 2

## விழித்திருந்தமையாலேயே சாவு எண்ணிக்கை குறைவு

### வவுனியா விபத்தில் தப்பியோர் திகில் வாக்குமூலம்

வவுனியா, நொச்சிமோட்டை பாலத்துக்கு அருகில் விபத்து இடம்பெறுவதற்கு சிறிது நேரத்துக்கு முன்னரே உணவுக்காக கடையொன்றில் அதிசொகுசு பஸ் நிறுத்தப்பட்டது. இதனால் பஸ்ஸில்பெரும்பாலானவர்கள் நித்திரை கொள்ளவில்லை. விபத்து இடம்பெற்றபோது விழித்திருந்தமையால் பஸ்ஸின் கம்பிகளைப் பிடித்து அதிகளவானோர் உயிர்ச் சேதங்கள் இன்றி தப்பித்தனர்.

–இவ்வாறு விபத்துக் குள்ளான குறித்த அதிசொகுசு பஸ்ஸில் பயணித்துக் காயமடைந்த யாழ்., வடமராட்சியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். 8

## பஸ்ஸில் இருந்து தவறி விழுந்த தாதிய உத்தியோகத்தர் மரணம்

(ந.லோகதயாளன்)

பஸ்ஸில் இருந்து தவறி விழுந்த தாதிய உத்தியோகத்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் கொடிகாமம், மீசாலை பகுதியைச் சேர்ந்த குகதாசன் விமல்ராஜ் என்ற தாதிய உத்தியோகத்தரே உயிரிழந்தார்.

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ் பளைப் பகுதியில் வீதியின் நடுவே நின்ற 2

### மாவீரர் நாளையொட்டி

## கனகபுரம் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் ஆரம்பம்





கிளிநொச்சி – கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தின் சிரமதானப் பணி இன்றுபணிக்குழுவினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இன்று காலை 2

## ரணில் எகிப்து பயணம்



எகிப்தில் இடம்பெறுகின்ற காலநிலை மாற்றம் 2

### சுமந்திரன் – சிறீதரன் மோதலையடுத்து

## அவசரமாகக் கூடுகின்றது இலங்கைத் தமிழரசுக் கட்சி




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உட்கட்சிப்பூசல்களின் எதிரொலியாக கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் விரைவில் – இரண்டொரு வாரத்துக்குள் கூட்டப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைத் 2

## இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக கைது

### ஆஸ்திரேலியாவில் பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு




இலங்கை கிரிக்கெட் அணி வீரர் தனுஷ்க குணதிலக ஆஸ்திரேலியா – சிட்னி நகரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண் ஒருவர் அளித்த முறைப்பாட்டுக்கமைய அவர் கைது செய்யப்பட்டார் என்று இலங்கை கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அனுமதியின்றி உடலுறவு கொண்டமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன என்று ஆஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சமூகவலைத்தளம் ஊடாக தனக்கு 2

## இலங்கை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறிமுகமான 29 வயது பெண் ஒருவரையே, அவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இந்த வார தொடகத்தில் சிட்னியில் உள்ள குடியிருப்பொன்றில் நடந்துள்ளது.

கடந்த வாரம் சிட்னியின் கிழக்கில் நடந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக இன்று அதிகாலை ஒரு மணியளவில் தனுஷ்க குணதிலக (வயது 32), சசெக்ஸ் ஸ்ட்ரீட் விடுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய, பிராந்திய குற்றப் பிரிவின் பாலியல் குற்றப் பிரிவு மற்றும் கிழக்கு புறநகர் பொலிஸார் கூட்டு விசாரணையைத் தொடங்கினர். அதனடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார்.

இந்தநிலையில், 'ரி – 20' உலகக்கிண்ணத் தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இழந்த இலங்கை அணி தனுஷ்க குணதிலக இல்லாமலேயே ஆஸ்திரேலியாவிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டுள்ளது.

'ரி – 20' உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்பதற்காக ஆஸ்திரேலியா சென்றிருந்த இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த தனுஷ்க குணதிலக கடந்த 3 வாரங்களுக்கு முன்னர் உபாதை காரணமாக தொடரிலிருந்து விலகியிருந்தார்.

அவருக்குப் பதிலாக அசேன் பண்டார அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டார்.

எனினும், தனுஷ்க குணதிலகவை மீண்டும் நாட்டுக்கு அனுப்பாமல் அவரைக் கிரிக்கெட் அணி நிர்வாகம், தம்முடனேயே வைத்திருந்தது எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கடந்த 2018 ஆம் ஆண்டு தனுஷ்க குணதிலக இதே போன்றதொரு குற்றச்சாட்டுக்கு உள்ளானார்.

இலங்கையில் நோர்வே பெண் ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டில் தனுஷ்கவையும் அவரது நண்பர் ஒருவரையும் பொலிஸார் விசாரித்தனர்.

எனினும், அவரது நண்பர் இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டதுடன், குறித்த சம்பவத்துடன் தனுஷ்கவுக்குத் தொடர்பு இல்லை என்று விசாரணையில் தெரியவந்ததையடுத்து விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 15 தமிழக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போது குறித்த தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களைக் கடற்றொழில் திணைக்களத்தின் ஊடாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடற்படை தெரிவித்துள்ளது.

## கனகபுரம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
8 மணியளவில் மாவீரர்களுக்குச் சுடரேற்றி மலர் தூவி அக வணக்கம் செலுத்தி சிரமதானப் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தச் சிரமதானப் பணியில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் தங்களுடைய குழந்தைகளின் வித்துடல்களை விதைத்த பெற்றோர், உறவுகள், தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தின் முதன்மைச் செயற்பாட்டாளர் தியாகு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுரேன், சமூகச் செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கால்வாயை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முயன்ற போது, நீரோட்டத்தில் சிக்கி அடித்துச் செல்லப்பட்டார் என்று பொலிஸ்ஊடகப்பிரிவுதெரிவித்துள்ளது.

பின்னர் பிரதேசவாசிகள் சிறுமியை மீட்டு நுவரெலியா வைத்தியசாலையில் சேர்த்தபோதும் அவர் உயிரிழந்துள்ளார்.

வெதமுல்லவத்தை, கெமில்டன் பகுதியைச் சேர்ந்த தரம் 5 இல் கல்வி கற்கும் யோகராஜா அனுஷா என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுமி தனது சகோதரியுடன் நேற்று மாலை பிரத்தியேக வகுப்புக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும் போதே இந்த அனர்த்தத்தில் சிக்கியுள்ளார் என்று பொலிஸார் மேலும் கூறினர்.

## பஸ்ஸில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாட்டைக் காப்பாற்ற முற்பட்ட வேளையில் குறித்த தாதிய உத்தியோகத்தர் பஸ்ஸில் இருந்து தவறி வீதியில் விழுந்து படுகாயமடைந்திருந்தார்.

பின்னர் குறித்த உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றிரவு மரணமடைந்தார்.

## அவசரமாக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், நாடாளுமன்ற உறுப்பினரின் எம்.ஏ.சுமந்திரன் எடுக்கும் தீர்மானங்களுக்கு எதிராகவே கட்சியின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படத் தீர்மானித்துள்ளனர் என்று அண்மையில் தொலைக்காட்சி நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் கருத்தை ஆதரித்தும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் நடவடிக்கைகக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்தப் பின்னணியில் – உட்கட்சி மோதல்களால் – இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தை விரைந்து கூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் எவரும் எனக்கு அழுத்தமேதும் பிரயோகிக்கவில்லை. கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நீண்ட காலமாக கூட்டப்படவில்லை. அதனாலேயே இரண்டொரு வாரங்களுக்குள் அதனைக் கூட்டுவதற்கு கட்சியின் பொதுச் செயலாளருடன் கலந்தாலோசித்துள்ளேன் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக கட்சியின் மத்திய குழு கடந்தகாலங்களில் கூடி ஆராய்ந்து வெறும் தீர்மானங்களை மாத்திரமே எடுத்துள்ளதுடன் அவற்றில் எதையுமே நடைமுறைப்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ரணில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பான 'கோப் 27' மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன்று அதிகாலை நாட்டிலிருந்து பயணித்தார்.

இந்த மாநாடு நாளை முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இதில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக்குழுவினர் இன்று அதிகாலை 2.50 மணியளவில் நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

எமிரேட்ஸ் விமான சேவையின் ஈ.கே-653 ரக விமானத்தில் டுபாய்க்குச் சென்ற அவர்கள், அங்கிருந்து எகிப்து நோக்கிப் பயணமாகினர்.




நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தீர்வுக்கு எது அவசியம்?

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பல்வேறு அவசர, அவசிய முன்நடவடிக்கைகளை புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசு பலமுனைகளில் ஆரம்பித்து இருக்கின்றது என செய்திகள் வெளியாகி வருகின்றன.

இனப்பிரச்சினையை ஒட்டிய உடனடி விடயங்களுக்குத் தீர்வு காண்பதற்காக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் அமைச்சர்கள் அலி சப்ரி, டக்ளஸ் தேவானந்தா, விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோரைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கிறது. அது ஒவ்வொரு திங்கட் கிழமையும் அமைச்சரவை கூட்டத்தின் பின் உடனடியாகக் கூடி, அவசர நெருக்கடிப் பிரச்சினைகள் பற்றிய விடயங்களைக் கையாள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் மீள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு வசதியாக ஜனாதிபதி தலைமையில் தனியான பிரிவு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எல். இளங்கோவன் தலைமையில் இந்தப் பிரிவு கொழும்பிலும், வவுனியாவிலும் அலுவலகம் அமைத்து காத்திரமான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது எனக் கூறப்படுகிறது.

அதேசமயம், அரசாங்கம் இந்த விடயங்களை ஒட்டி உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை விரைவில் அமைக்கும் என ஜெனிவாவில் அறிவித்து இருந்தது. அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன எனக் கூறப்படுகிறது.

உண்மையில் தேசிய இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான – நின்று, நிலைத்து, நீடிக்க கூடிய – இணக்கமான – தீர்வு ஒன்றைக் காணும் நல்லெண்ணம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு இருக்கலாம்.

ஆட்சி அதிகாரத்துக்கு வந்த கையோடு, அதனை ஒட்டி விரைந்து நடவடிக்கைகள், செயற்பாடுகளை முன்னெடுக்க முயலும் அந்த ஆட்சிப் பீடத்தைச் சந்தேகக் கண்ணோடு நோக்க வேண்டிய அவசியம் இப்போதைக்கு இல்லை.

ஆயினும், இத்தகைய முயற்சிகள் முன்னேறி, பயன் தருவதாயின், அவற்றுக்கு சில அடிப்படைகள் அத்தியாவசியமானவை. அவற்றை நினைவூட்டுவது முக்கியம். அவை நிபந்தனைகள் அல்ல. தீர்வுக்கான கட்டாய அடிப்படைகள்.

யுத்தத்தின் போதும், அதற்கு முன்னரும், பின்னரும் தங்களுக்கு இழைக்கப்பட்ட பெருங்குற்றங்களை மூடி மறைத்து விட்டு, அவற்றின் மேல் நல்லிணக்கம், புரிந்துணர்வு என்ற பூச்சாண்டி கட்டப்படுவதை எந்த இனமும் ஏற்றுக் கொள்ளாது.

கடந்த கால மோசமான இழப்புக்கள் கண்டறியப்பட்டு, உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலை நிறுத்தப்பட்டு, அவற்றின் மீது நல்லிணக்கம் கட்டி எழுப்பப்பட்டால்தான் அது நிலைத்திருக்கும். அதன் மீது உறுதியான, நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய இணக்கமான சமாதானத்தைக் கட்டி எழுப்ப முடியும்.

பொறுப்புக் கூறல் கடப்பாட்டின் மீதான அதிகாரம் இல்லாத நிலையில் உண்மைகளைக் கண்டறிந்து நல்லிணக்கத்தை கட்டி எழுப்பும் ஆணைக் குழுவை அமைப்பது பயனற்றது என்பதை ரணிலின் அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

## சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தின் வருடாந்த அணிவகுப்பு மரியாதை, பரிசோதனை முன்னெடுப்பு



அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2022 ஆம் ஆண்டுக்கான பரிசோதனை பொலிஸ் நிலையத்தில் நேற்று (சனிக்கிழமை) இடம் பெற்றது.

சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எம்.சம்சுடீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஜெயந்த ரத்னாயக்க கலந்து கொண்டார்.

மேலும் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவை பிரிவு , சுற்று சூழல் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறைகளைப் பார்வையிட்டதுடன் பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஜெயந்த ரத்னாயக்க பரிசோதனை மேற்கொண்டிருந்தார்.

## முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடு நாளை!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 30 ஆவது பேராளர் மாநாடு நாளை (திங்கட்கிழமை) முற்பகல் 10 மணிக்கு புத்தளம், கே.ஏ. பாயிஸ் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில் நாடெங்கிலுமிருந்து கட்சியின் பேராளர்கள் கலந்து கொள்வர்.

அதற்கு முன்னதாக, இன்று (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10 மணிக்கு கொழும்பில், கட்சியின் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் முஸ்லிம் காங்கிரஸின் கட்டாய உயர்பீடக் கூட்டம் நடைபெற்றதாகவும் அதன் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## யாழ். அரியாலை பகுதியில் சீனர்களைத் தவிர வேறு எவரும் வடக்கில் கடலட்டை பண்ணை செயற்பாடுகளில் இல்லையாம்!

### உறுதிபடக் கூறுகிறார் அமைச்சர் டக்ளஸ்

நான் தவறு செய்தால் மன்னிப்பு கேட்டு அதனை திருத்தி செய்வதே எனது வழமையான செயற்பாடு எனத் தெரிவித்தார். ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா .

யாழில் உள்ள ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகள் தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மக்களை உசுப்பேத்தி அரசியல் செய்யும் அரசியல்வாதி நான் அல்லன்.

மக்களின் எதிர்காலத்துக்கு எது சரியோ அதை முன்பே திட்டமிட்டு பலவற்றை நிறைவேற்றியுள்ளதோடு இன்னும் நிறைவேற்றுவேன்.

கடலட்டை பண்ணைகள் தொடர்பில் சிலர் அறிந்து பேசுகிறார்களோ அல்லது அறிந்தும் அறியாதவர்கள் போல் பேசுகிறார்களோ என எனக்குத் தெரியாது.

வடக்கு மாகாணத்தில் சுமார் 5,000 ஆயிரம் ஏக்கரில் கடல் அட்டை பண்ணைகளை விரிவுபடுத்த ஏற்கனவே திட்டங்கள் தீட்டப்பட்டுள்ள நிலையில் சுமார் 1,150 ஏக்கரில் கடலட்டைப் பண்ணைகள் செயற்படுத்தப்படுகிறன.

நான் அமைச்சராக வர முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் 18 பண்ணைகளும், யாழ் மாவட்டத்தில் 11 பண்ணைகளும் மன்னார் மாவட்டத்தில் 3 பண்ணைகளுமாக 32 பண்ணைகள் காணப்பட்டன.

நான் அமைச்சராகப் பதவியேற்றதன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் 277 பண்ணைகள் அமைக்கப்பட்டதுடன் மேலும் 163 பண்ணைகள் அமைக்கப்பட உள்ளன.

யாழ் மாவட்டத்தில் 245 பண்ணைகள் அமைக்கப்பட்டதுடன் மேலும் 176 பண்ணைகள் அமைக்கப்படவுள்ளதோடு மன்னார் மாவட்டத்தில் 78 பண்ணைகள் அமைக்கப்பட்டதுடன் இன்னும் பண்ணைகள் அமைக்கப்பட உள்ளன.

பருத்தித்தீவு கடல் அட்டை பண்ணையில் சீன இராணுவத்தினர் இருக்கின்றனர் எனவும் இதனால் இந்திய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அந்தப் பண்ணைகளுக்கும் சீனர்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

நல்லாட்சி அரசாங்கத்தில் அரியாலையில் உள்ள கடல் அட்டை குஞ்சு இனப்பெருக்க நிலையத்தில் ஏற்கனவே சீனர்கள் வந்தார்கள். அங்கு இருக்கின்ற சீனர்களைத் தவிர வேறு யாரும் இதுவரை கடலட்டை பண்ணை செயற்பாடுகளில் வடக்கில் ஈடுபடவில்லை.

நாரா நிறுவனம் மற்றும் கடற்றொழில் திணைக்களம் போன்றவற்றால் ஆய்வு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட பகுதிகளில் தழுவல் அடிப்படையில் கடலட்டை பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. அதற்கான அனுமதிகளை உரிய ஒழுங்கு முறைகளில் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான காலத்தை, வீண் விரயமாக்க கூடாது என்பதாலேயே தழுவல் முறையில் வழங்கப்படுகின்றன.

எனினும், தன்னிச்சையாக யாராவது அனுமதிகள் இன்றி கடலட்டை பண்ணைகளை அமைப்பார்களாயின் அவை அகற்றப்படும்.

தற்போது உருவாக்கப்பட்டுள்ள பண்ணைகளில் 95 வீதமானவை அந்தந்தப் பிரதேசத்தினை சேர்ந்த கடற்றொழிலாளர்களாலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், இந்தியா, சீனா போன்ற நாடுகள் கடலட்டை பண்ணைகளில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வம் செலுத்தி வருகின்றன.

அவ்வாறு, என்னை அணுகியவர்களிடம் வருடாந்தம் இரண்டரை கோடி கடலட்டை குஞ்சுகளை உற்பத்தி செய்து எமக்கு வேண்டும் என்ற நிபந்தனையை விதித்துள்ளேன்.

அவர்கள் யாராக இருந்தாலும், எமது மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றும் பட்சத்திலேயே அடுத்த கட்ட நகர்வுகள் மேற்கொள்ளப்படும்.

என்னைப் பொறுத்தவரையில் இந்தியாவா சீனாவா என்ற வினா எழுப்பப்படுமானால் இந்தியாவே என கூறிக் கொள்வதோடு கடல் சார்ந்து மக்களுக்கான அபிவிருத்தி திட்டங்கள் விரைவாகவும் வினைதிறனாகவும் செயல்படுத்தப்படும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# கென்யாவில் கடும் வறட்சி பலியாகும் வன விலங்குகள்





கிழக்கு ஆபிரிக்கா நாடுகளில் கடந்த 40 ஆண்டுகள் இல்லாத வறட்சி நிலவி வருகிறது. அதுவும் கென்யாவில் வரலாறு காணாத அளவு வறட்சி ஏற்பட்டுள்ளது.

இதனால் காடுகளில் வசித்து வரும் வன விலங்குகள் அடுத்தடுத்து உயிரிழந்து வருகின்றன. கடந்த 10 மாதங்களில் மட்டும் இதுவரை 205 யானைகள், ஆயிரத்துக்கு மேற்பட்ட வரிக் குதிரைகள் இறந்து விட்டன. பெப்ரவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை யானைகள் தவிர வரிக் குதிரைகள், ஒட்டகசிவிங்கிகள், காட்டெருமைகள், உள்ளிட்ட 14 வகையான வன விலங்குகள் வறட்சியின் கோரபிடியில் சிக்கி பலியாகி வருகின்றன.

வன விலங்குகள் தொடர்ந்து இறந்து வருவது சமூக ஆர்வலர்களை கவலைக்குள்ளாக்கி இருக்கிறது. கென்யாவைப் பொறுத்தவரை சிறந்த சுற்றுலா தளமாக திகழ்ந்து வருகிறது. வறட்சி காரணமாக சுற்றுலா தொழிலும் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. அரசுக்கு வருவாய் இழப்பும் ஏற்பட்டு உள்ளது.

இது அந்நாட்டு அரசை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. கென்யாவில் தற்போதைய சூழ்நிலையில் மழைப்பொழிவுக்கான சூழ்நிலையும் இல்லை. இதனால் மேலும் பல வன உயிர் இனங்கள் பாதிக்கப்படும் நிலை உள்ளது. வன விலங்குகள் இறப்பதை தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ரஷ்ய ஹோட்டலில் தீ விபத்து 13 பேர் பலி; ஐவருக்கு காயம்



மொஸ்கோ, நவ.06

ரஷ்யாவின் மொஸ்கோ அருகில் உள்ள கோஸ்ட்ரோமாவில் உள்ள பிரபல ஹோட்டலில் இன்று திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தீ மளமளவென பரவியதால் வாடிக்கையாளர்களும், ஊழியர்களும் அவசரம் அவசரமாக வெளியேறினர். எனினும் கரும்புகை சூழ்ந்ததால் பலர் வெளியேற முடியாமல் சிக்கிக்கொண்டனர். ஹோட்டலின் மேற்கூரையும் இடிந்து விழுந்தது. தகவல் அறிந்த தீயணைப்பு மற்றும் மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். சுமார் 250 பேரை மீட்புக்குழுவினர் பத்திரமாக மீட்டனர். எனினும் தீயில் சிக்கியும் இடிபாடுகளில் சிக்கியும் 13 பேர் உயிரிழந்தனர். 5 பேர் காயமடைந்தனர்.

யாரோ ஒரு நபர் பிளேர் துப்பாக்கியைப் பயன்படுத்திய பிறகே தீப்பிடித்ததாக கூறப்படுகிறது. தீ விபத்து ஏற்படுவதற்கு சற்று முன்பு ஹோட்டலில் சண்டை மூண்டதாக தகவல் வெளியாகி உள்ளது. ஆனால் அதற்கும் பிளேர் துப்பாக்கிக்கும் தொடர்பு இருக்கிறதா என்பது உடனடியாகத் தெரியவில்லை. தீவிபத்து தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து சந்தேகத்தின்பேரில் ஒருவரை பிடித்து விசாரித்துவருகின்றனர். உணவக இயக்குனரிடமும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## சீன ரொக்கெட் எஞ்சிய பாகங்கள் பசிபிக் பெருங்கடலில் வீழ்ந்தன



பீஜிங்,நவ.06

சீன ரொக்கெட் பாகங்கள் பசுபிக் பெருங்கடலில் இன்று அதிகாலை விழுந்தன.

சீனா விண்ணில் சொந்தமாக விண்வெளி ஆய்வு நிலையத்தை அமைத்து வருகிறது. இதற்கு தேவையான உபகரணங்களை கடந்த ஒக்ரோபர் 31 ஆம் திகதி, 'லாங் மார்ச்-5பி' ரொக்கெட் மூலம் அனுப்பியது. 108 அடி நீளமும், 23 தொன் எடையும் கொண்ட அந்த ரொக்கெட், தான் சுமந்து சென்ற உபகரணங்களை விண்வெளி நிலையத்தில் சேர்த்தது.

பின்னர் ரொக்கெட்டின் மீதமுள்ள பாகங்கள் பூமியை நோக்கி திரும்பின. அந்த ரொக்கெட் பாகங்கள், அதன் சுற்று வட்டப் பாதையில் இருந்து விலகி பூமியில் விழும் அபாயம் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் எந்த பகுதியில் சரியாக விழும் என்பதை சீனா உறுதி செய்யவில்லை. இந்த நிலையில் ரொக்கெட்டின் பாகங்கள் வளிமண்டலத்தில் நுழைந்து தெற்கு மத்திய பசுபிக் பெருங்கடல் பகுதியில் இன்று அதிகாலை 4.01 மணியளவில் விழுந்துள்ளன என யு.எஸ். ஸ்பேஸ்காம் என்ற அமெரிக்க விண்வெளி கழகம் தெரிவித்துள்ளது.

ரொக்கெட் பாகங்கள் பூமிக்கு திரும்பும் போது வளி மண்டலத்தில் எரிந்து சாம்பலாகும். ஆனால் சீன ரொக்கெட் பாகங்கள் பூமியில் விழுந்த சம்பவங்கள் நடந்து உள்ளன.

இதற்கு முன்பு ரொக்கெட் பாகங்கள் மலேசியா, இந்தோனேசியா உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டன.

ரொக்கெட்டின் வடி வமைப் பின்படி பூமியின் எந்த பகுதியில் விழ வேண்டும் என்ற வழிகாட்டி அமைப்போ அல்லது மக்களிடம் இருந்து தொலைவில் விழுவதற்கான அமைப்போ அதில் இடம் பெறவில்லை என்று கூறப்படுகிறது. சீன ரொக்கெட் பாகங்கள் பூமியில் விழுவது இது 4 ஆவது முறையாகும்.

## இடிந்து விழுந்த சுரங்கத்தில் சிக்கிய இருவர் ஒன்பது நாள்களின் பின் மீட்பு

### தென்கொரியாவில் நடந்த சம்பவம்



தென்கொரியாவின் கிழக்கு பகுதியில் உள்ள போங்வா நகரில் துத்தநாகம் சுரங்கம் அமைந்துள்ளது. கடந்த மாதம் 26 ஆம் திகதி இந்த சுரங்கத்தில் வழக்கம் போல் பணிகள் நடந்து கொண்டிருந்தபோது சுரங்கம் திடீரென இடிந்து விழுந்தது.

இதில் 62 மற்றும் 56 வயதான 2 தொழிலாளர்கள் சுரங்கத்தில் 650 அடி ஆழத்தில் சிக்கி கொண்டனர். எனினும் இந்த விபத்து குறித்து கடந்த இரு தினங்களுக்கு முன்புதான் மீட்பு குழுவினருக்கு தகவல் கிடைத்தது. அதை தொடர்ந்து உடனடியாக மீட்பு பணிகள் முடுக்கிவிடப்பட்டன. மீட்பு குழுவினரின் கடும் முயற்சியின் பலனாக சுரங்கம் இடிந்து விழுந்த 9 நாள்களுக்கு பிறகு, நேற்று முன்தினம் தொழிலாளர்கள் 2 பேரும் பத்திரமாக மீட்கப்பட்டனர். அவர்கள் தாமாக நடந்து வரும் அளவுக்கு உடல் வலிமையுடன் இருந்தனர். உடனடியாக அவர்கள் இருவரும் ஆஸ்பத்திரிக்கு அழைத்து செல்லப்பட்டனர்.


அங்கு அவர்களை பரிசோதித்த டாக்டர்கள் இருவரும் நலமுடன் இருக்கின்றனர் எனத் தெரிவித்தனர். இதனிடையே சுரங்கத்தின் அடியில் சிக்கிய தொழிலாளர்கள் இருவரும் கூரையில் இருந்து விழுந்த தண்ணீரை குடித்தும், காபி பவுடரை உணவாக உட்கொண்டும் உயிர் பிழைத்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். விபத்து நடந்த 9 நாள்களுக்கு பிறகு தொழிலாளர்கள் 2 பேரும் உயிருடன் மீட்கப்பட்டமை உண்மையில் அதிசயம் என்று கூறிய அந்த நாட்டின் அதிபர் யூன் சுக் யோல் மீட்பு குழுவினருக்கு தனது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

# காற்று மாசு மோசமடைந்ததால் டெல்லியில் சுவாச கோளாறுகள்

## நோயாளிகளின் எண்ணிக்கை 50 வீதம் அதிகரிப்பு

புதுடெல்லி,நவ.06

டெல்லியில் சுவாச கோளாறுகளால் மருத்துவமனையில் சேரும் நோயாளிகளின் எண்ணிக்கை 40 முதல் 50 சதவீதம் அதிகரித்து உள்ளது. டெல்லியில் காற்று தர குறியீடு தொடர்ந்து மோசமடைந்து வருகிறது. டெல்லி– என்.சி.ஆர். மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் காற்று மாசு அதிகரித்து உள்ளது. டெல்லியின் ஒட்டுமொத்த காற்று தர குறியீடு 431 ஆக உள்ளது என மத்திய புவி அறிவியல் அமைச்சகம் நேற்று தெரிவித்து இருந்தது. இதேபோன்று உத்தர பிரதேசத்திற்கு உட்பட்ட நொய்டா நகரில் காற்று தர குறியீடு 529 ஆக பதிவாகி உள்ளது. அரியானாவுக்கு உட்பட்ட குருகிராம் நகர் (478) கடுமையான பிரிவிலும், அதற்கருகே உள்ள தீர்ப்பூர் நகர் (534) கடுமையான பிரிவிலும் உள்ளன. டெல்லி, அரியானா உள்ளிட்ட வடமாநிலங்களில் காற்று தர குறியீடு கடுமையாக மோசமடைந்து உள்ளது என எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.



டெல்லியில் காற்று தர குறியீடு மோசமடைந்துள்ள சூழலில், லேடி ஹார்டிங்கே மருத்துவமனை மற்றும் கலாவதி மருத்துவமனை ஆகியவற்றில் சுவாச கோளாறுகளால் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை 40 முதல் 50 சதவீதம் அதிகரித்து உள்ளது. இதுபற்றி லேடி ஹார்டிங்கே மருத்துவமனையின் மருத்துவர் ஈரதா கூறும்போது –

சரியான புள்ளிவிவரத் தகவல் இல்லை. ஆனால், அவசரகால நிலை ஏற்பட்டு உள்ளது. காற்று மாசுபாட்டால் நுரையீரல் தமனிகளின் பாதிப்பு நோயாளிகளிடையே அதிகரித்து உள்ளது. இதனால், அந்த அறிகுறிகளுடன் சேர கூடிய நோயாளிகளின் எண்ணிக்கை 40 முதல் 50 சதவீதம் அதிகரித்து காணப்படுகிறது. இந்த பாதிப்பு உள்ளவர்களுக்கு முன்பே வேறு சில சுவாச கோளாறுகளும் உள்ளன. நோயெதிர்ப்பு ஆற்றல் குறைவாக உள்ளவர்கள் எளிதில் பாதிப்புக்கு இலக்காகி விடுகின்றனர். அவர்களுக்கு வேறு சுவாச பாதிப்புகளான இருமல், மார்பு வலி மற்றும் சுவாசிப்பதில் அதிக சிரமம் ஆகியவை காணப்படுகின்றன. இதுவே தற்போதுள்ள நிலைமையாக உள்ளது. நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து உள்ளது. என கூறியுள்ளார்.

சமீபத்தில் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் முன்னாள் இயக்குனர், டாக்டர் ரன்தீப் குலேரியா கூறும்போது, புகையிலை உபயோகிப்பதில் ஏற்படும் பாதிப்புகளை விட காற்று மாசு அதிக பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. சிகரெட் புகைப்பது, புகையிலையை தவிர்ப்பது பற்றி நாம் அதிகம் பேசுகிறோம். ஆனால், அவற்றை விட காற்று மாசால் அதிக பாதிப்பு மற்றும் பிரச்சனைகள் ஏற்படுகின்றன என அவர் கூறியுள்ளார். 2017 ஆம் ஆண்டு வெளியான செய்தி நிறுவன தகவலின்படி, ஒவ்வோர் ஆண்டும் நாட்டில் 12.4 லட்சம் பேர் காற்று மாசுபாட்டால் உயிரிழக்கின்றனர் என்ற அதிர்ச்சி தகவல் தெரிய வந்துள்ளது.

அதனால், இது அதிக உயிரிழப்பையும் ஏற்படுத்துகிறது. அதிக பாதிப்புகளையும் உண்டு பண்ணுகிறது. பலருக்கும் சிக்கலை ஏற்படுத்துகிறது என குலேரியா கூறியுள்ளார்.

# நேபாள பகுதிகளை இந்தியா ஆக்கிரமித்ததாக மீள சர்ச்சை


நேபாள முன்னாள் பிரதமர் சர்மா ஒலி

காத்மாண்டு: இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தில் இம்மாத இறுதியில் பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. கட்சி தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

முன்னாள் பிரதமர் கே.பி.சர்மா ஒலி, தார்ச்சுலா மாவட்டத்தில் தனது கட்சியின் தேர்தல் பிரசாரத்தை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

நமது நிலத்தில் ஓர் அங்குலத்தை கூட விட்டு கொடுக்க மாட்டோம். எங்கள் கட்சி தேர்தலில் வெற்றி பெற்றால், காலாபானி, லிபுலெக், லிம்புயதுரா (இந்திய பகுதிகள்) உள்பட ஆக்கிரமிப்பு பகுதிகளை மீட்டு கொண்டு வருவோம். எங்களது கட்சி, தேசத்தை பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறது.. – இவ்வாறு அவர் கூறினார். இந்தியா – நேபாள உறவுகள் நீண்ட காலமாக சுமுகமாகவே உள்ளன. ஆனால் நேபாளத்தின் பிரதமராக சர்மா ஒலி பதவியேற்ற பிறகு இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் சிறிது விரிசல் ஏற்பட்டது. கே.பி.சர்மா ஒலி பிரதமராக இருந்தபோது அவரது அரசாங்கம் இந்தியாவின் 3 பகுதிகளை நேபாளத்துடன் இணைத்து நாட்டின் புதிய வரைபடத்தை வெளியிட்டது. அப்பகுதிகளை இந்தியா ஆக்கிரமித்துள்ளதாக குற்றம் சாட்டினார் சர்மா ஒலி. இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இந்த நிலையில் கே.பி.சர்மா ஒலி இவ்விவகாரத்தை மீண்டும் பேசி உள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

அதே போல் நேபாள காங்கிரஸ் தலைவரும், பிரதமருமான ஷேர் பகதூர் தியூபா தனது தேர்தல் பிரசாரத்தில் கூறும்போது, ராஜதந்திர முயற்சிகள், பரஸ்பர உறவுகளின் அடிப்படையில் நேபாளத்தின் ஆக்கிரமிப்பு நிலத்தை மீட்பதற்கான முயற்சிகள் நடந்து வருவதாக தெரிவித்தார். நேபாளத்துக்கு இந்தியா பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. சமீபத்தில் நேபாள பொது தேர்தலின்போது போக்குவரத்து உள்ளிட்ட வசதிகளுக்காக 200 வாகனங்களை இந்தியா அன்பளிப்பாக நேபாளத் துக்கு வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

# சிங்களப் படையின் அத்துமீறல்களுக்கு முடிவு எப்போது என ராமதாஸ் கேள்வி!

இலங்கையின் அத்துமீறலுக்கு முடிவு எப்போது பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் கேள்வி எழுப்பி உள்ளார். சிங்களப் படையினரால் கடந்த 27 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 7 மீனவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. தமிழக மீனவர்களை இனி கைது செய்யவோ, தாக்கவோ கூடாது என்று இலங்கை அரசை மத்திய அரசு கடுமையாக எச்சரிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறி இருப்பவை வருமாறு:– வங்கக்கடலில் கச்சத்தீவு அருகே இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 15 பேரை சிங்களக் கடற்படை கைது செய்திருக்கிறது. அவர்களின் இரு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. சிங்களப்படையினரின் இந்த அத்துமீறல் கண்டிக்கத்தக்கது. சிங்களப் படையினரால் கடந்த 27ஆம் திகதி கைது செய்யப்பட்ட 7 மீனவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டு இரு நாள்கள் முன் விடுவிக்கப்பட்ட 3 மீனவர்கள் இன்னும் சொந்த ஊர் திரும்பவில்லை. அதற்குள்ளாக அடுத்த அத்துமீறல் நடந்திருக்கிறது. மீனவர்கள் கைது செய்யப்பட்டதை தமிழக அரசும், பா.ம.க. உள்ளிட்ட கட்சிகளும் கண்டித்து வருகின்றன. ராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டமும் நடத்தியுள்ளனர். அதற்குப் பிறகும் தொடரும் சிங்களப் படையினரின் அத்துமீறலுக்கு இந்திய அரசு எப்போது முடிவு கட்டப் போகிறது? இப்போது கைது செய்யப்பட்ட 15 மீனவர்களையும், ஏற்கனவே சிறைபட்ட 7 பேரையும் உடனடியாக மீட்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக மீனவர்களை இனி கைது செய்யவோ, தாக்கவோ கூடாது என்று இலங்கை அரசை மத்திய அரசு கடுமையாக எச்சரிக்க வேண்டும். – இவ்வாறு அவர் கூறி உள்ளார்.



# கடுமையாக உழைக்க கூடியவர்கள் இந்திய மக்களுக்கு புடின் பாராட்டு

மொஸ்கோ,நவ.06

ரஷ்ய ஒற்றுமை தினம் தலைநகர் மொஸ்கோவில் கொண்டாடப் பட்டது. இதில் அதிபர் விளாடிமிர் புடின் கலந்து கொண்டு பேசினார். அப்போது இந்தியாவை அவர் வெகுவாக பாராட்டினார். அவர் கூறியவை வருமாறு:-

இந்தியாவை பாருங்கள். உள்நாட்டு வளர்ச்சிக்குத் தேவையான ஒரு திறமையான, கடுமையாக உழைக்க கூடிய மக்களை கொண்டு உள்ளது. இந்தியர்கள் மிகவும் திறமையானவர்கள். ஊக்கத்துடன் செயல்படக் கூடியவர்கள்.

அவர்களால் இந்தியா வளர்ச்சி பெற்று வருகிறது. விரைவில் இந்தியா, வளர்ச்சியில் மிகப்பெரிய சாதனை படைக்கும். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஏறக்குறைய 150 கோடி மக்களை கொண்ட நாடு அது. அதுவே அவர்களுக்கான ஆற்றலாக உள்ளது. அந்த நாட்டு மக்கள், வளர்ச்சிக்கான மிகப் பெரிய ஆதாரமாக உள்ளனர்.

ஆப்பிரிக்கா நாட்டை, மேற்கத்திய நாடுகள் கொள்ளையடித்துச் சூறையாடி சென்று விட்டன. அது ஒரு வெளிப்படையான உண்மை. காலனி ஆதிக்கத்தில் ஈடுபட்ட நாடுகளின் செல்வசெழிப்புக்கு ஆப்பிரிக்காவை அவர்கள் கொள்ளையடித்தமைதான் காரணம். அதை ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்களும் மறைக்கவில்லை.

ஆப்பிரிக்காவின் துயரத்தில் இருந்தும், வேதனையில் இருந்துமே இந்த நாடுகள் வளம் பெற்றுள்ளன என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். ஐரோப்பிய நாடுகளின் வளம் முழுமைக்கும் ஆப்பிரிக்க சுரண்டல் மட்டுமே காரணம் என்று நான் கூறவில்லை. ஆனால் மிக முக்கிய காரணம் கொள்ளை, அடிமை வணிகம் ஆகியவையே ஐரோப்பியாவின் செழுமைக்கு முக்கிய காரணம். கிறிஸ்தவ மதத்தின் அப்படையில் ரஷ்யா, ஐரோப்பிய கலாச்சாரத்தின் குறிப்பிடத்தக்க ஓர் அங்கம். ஆனால் ரஷ்ய நாகரிகமும், கலாச்சாரமும் தனித்தன்மை வாய்ந்தவை. - இவ்வாறு அவர் கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பூர்வீக நிலப் பறிப்புக்கு எதிராக ஒன்றிணைந்து சிறுபான்மைத் தலைமைகள் குரல் தர வேண்டும்!




## கிழக்கில் இருந்து இப்படிக் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களின் விவசாய நிலங்களை அரசாங்கம் அபகரித்து, அம்மக்களை விவசாயம் செய்யாமல் தடை செய்து, இனவாத அதிகாரிகளால் விரட்டியடிக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்டத்தில் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை என எழுத்தாளரும், பன்நூல் ஆசிரியருமான கவிஞர் கால்தீன் குற்றம் சாட்டுகின்றார்.


அக்கரைப்பற்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர் அங்கு இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு :-

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கும் இத் தருணத்தில், ஜனாதிபதி இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாதமை மிகுந்த வேதனையளிக்கின்றது. மூன்று தசாப்தங்களாக விவசாயம் செய்து வந்த காணிகளை இழந்து தவித்துக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு நீதி இல்லாமல் நடு வீதியில் நிற்கிறார்கள்.

இதற்கான தீர்வொன்றினைப் பெற்றுக் கொள்ள தமிழ், முஸ்லிம் தலைமைகள் ஒன்றிணைந்து வடக்குக் கிழக்கில் அதிகாரப் பகிர்வொன்றினைப் பெற்றுக் கொண்டு நமது மக்களின் துன்பங்களைப் போக்க முயற்சிக்க வேண்டும். – என்று தெரிவித்தார்.

## கஞ்சா, ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது

### மட்டு. வாகரை பொலிஸ் நிலையத்தில் வைத்து



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாரை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் நேற்று சனிக்கிழமை இரவு பொலிஸ் நிலையத்தில் வைத்துத் தாங்கள் கைது செய்துள்ளோம் என வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் காஸ்டபில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டுவருகின்றார் என மாவட்டப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவரை கண்காணித்துவந்துள்ள நிலையில் நேற்று இரவு கடமையை முடித்துவிட்டு பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேறி போது அவரிடமிருந்து கஞ்சா மற்றும் ஐஸ் போதைப் பொருளை மீட்டமையுடன் அவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் 23 வயதுடைய மகியங்கனை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், இவர் போதைக்கு அடிமையாகியுள்ளார் எனவும், இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஓட்டமாவடி பாலைநகர் விபத்தில் மனைவி பலி; கணவர் படுகாயம்!

(எச்.எம்.எம்.பர்ஸான்)

மோட்டார் சைக்கிள் – படி ரக வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலைநகர் பிரதான வீதியில் வைத்தே இவ் விபத்துச் சம்பவம் நேற்றிரவு 9.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

வாழைச்சேனை பகுதியிலுள்ள மகளின் வீட்டுக்கு சென்றுவிட்டு பாலைநகரிலுள்ள தனது வீட்டுக்கு கணவன் – மனைவி இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிந்த போது, பின்னால் வந்த படி ரக வாகனம் மோதியதில் மனைவி உயிரிழந்துள்ளார் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இவ் விபத்தில் உயிரிழந்தவர் பாலை நகர் பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயான 46 வயதுடைய உசனார் ஆமினா உம்மா என்பவர் என தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் உடல் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த கணவர் ஆதம் பாவா உசனார் அதே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் படி ரக வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தடுப்பூசிகள் ஏற்றிய பின்பும் மாடுகள் நுரை தள்ளி சுவாசிக்க முடியாமல் செத்துமடியும் அவலநிலை!

### மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் நெருக்கடியில்





(மட்டு. துஷரா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களில் சுமார் 800இற்கு மேற்பட்ட மாடுகள் திடீர் திடீரென உயிரிழந்து வருகின்றன என மட்டு. மாவட்டத்திலுள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாள்களாக மாடுகளுக்கு ஏற்பட்ட நோய் காரணமாக தினமும் பத்துக்கு குறையாத மாடுகள் வீதம் 800 இற்கு மேற்பட்ட மாடுகள் உயிரிழந்த நிலையில் வயல்வெளி, குளம், காடு மற்றும் மேய்ச்சல் தரை போன்ற பகுதிகளில் மீட்கப்பட்டுவருகின்றன எனவும் அவர்கள் தெரிவிக்கின் றனர்.

மட்டக்களப்பு மாவட்ட சித்தாண்டி மற்றும் கிரான் கால்நடை திணைக்களப் பிரிவுகளான சந்தனமடு ஆற்றுப் பகுதியை அண்டிய பகுதியான சித்தாண்டி 4ஆம் பிரிவு, ஈரளக்குளம், ஆலையடி, சேரடி, வேறம் பெரியவெட்டை, வட்டுவான், வெள்ளாமைச்சேனை, கூளாவடி, கோரவெளி, மாதந்தனை, மயிலந்தனை மேய்ச்சல் தரை போன்ற பிரதேசங்களில் ஒரு வயது தொடக்கம் ஒன்றரை வயது வரையிலானதும் கர்ப்பிணி மாடுகள், எருமை மாடுகள் மற்றும் பசு மாடுகளும் இந்நோய்த் தாக்கத்தினால் உயிரிழந்து வருகின்றன.

மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோயின் தாக்கத்தின் காரணமாக சுவாசிக்க முடியாது மாரடைப்பால் இறந்து வருதவதாகக் கூறிய கால்நடை திணைக்கள அதிகாரிகள், அதற்கான தடுப்பூசி மருந்துகளையும் ஏற்றி வருகின்றனர். இவ்வாறு தடுப்பூசிகள் ஏற்றிய பின்னரும், மாடுகளுக்கு வாயால் நுரை வெளியேறி மூக்கால் சுவாசிக்க முடியாது இறந்து வருகின்றன எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறு மாடுகள் உயிரிழப்பதால் தாம் பலத்த நஷ்டம் அடைந்துள்ளோம் எனவும் முதலில் உயிருடன் இருக்கின்ற மாடுகளை காப்பற்ற அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பாதிக்கப்பட்ட மாடுவளர்ப்போருக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்கவேண்டும் எனவும் கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு நோயாளர் நலன்புரிச் சங்கத்தால் உதவி!



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் நிதியுதவியில் வைத்திய சாலையின் சத்திரசிகிச்சைக்கூடத்துக்கு ஒருவாரத்துக்குத் தேவையான 15 பிளாஸ்டர் சுருள்கள் நேற்று (சனிக்கிழமை) வழங்கிவைக்கப்பட்டன.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி வாகீசனின் கோரிக்கைக்கு அமைவாக வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.றேமன்ஸிடம், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமாகிய லயன் சி.ஹரிகரன் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் செல்வி திருக்குமாரி, நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினர் லயன் விசாலினி சிவகுமார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் சுகாதாரத்துறையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் சாதாரணமான நோய்களுக்குக்கூட அடிப்படை மருத்துவ உதவிகளை வழங்கமுடியாமல் உள்ளது. இந்தநிலை நாட்டில் தொடருமானால் இலவச அரச வைத்தியசாலைகள் எந்தத் தேவைகளையும் பூர்த்தி செய்யமுடியாத நிலைமையே தொடரும் துர்ப்பாக்கிய ஏதுநிலை காணப்படுகின்றது. நாட்டிலுள்ள 40 வீதமான சாதாரண மக்கள் தமது சுகாதார சேவைகளைப் பெறமுடியாது அநாவசியமாக உயிர்கள் காவுகொள்ளப்படும்.

ஆகவே, சுகாதாரத்துறை மனிதனின் அடிப்படைத் தேவைகளுக்கு ஈடிணையற்ற முக்கியமான ஒன்றாகும். பணம் படைத்தவர்கள், கருணை உள்ளம் கொண்டவர்கள், புலம்பெயர் தேசத்தவர்கள் தமது பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளுடன் தொடர்புகொண்டு முதலில் உயிர்காக்கும் பணிகளையும் தொடர்ந்து இவ்வாறான சத்திரசிகிச்சைகளுக்குத் தேவையான மருத்துவ பொருள்கள், அடிப்படை மருந்துக்குளிகைகள் போன்றவற்றை அரச வைத்தியசாலைகளுக்கு வழங்குவதன் ஊடாக ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியும்.

# சட்டவிரோதமாக கடத்தப்பட்ட பீடி இலைகள் மீட்கப்பட்டன!

## சந்தேக நபர்கள் தப்பியோட்டம்



இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக பீடி இலைகளை சட்ட விரோதமான முறையில் கொண்டு செல்ல தயாராக இருந்த மீன் லொறியொன்றை நேற்று (சனிக்கிழமை) அதிகாலை மாம்புரி பகுதியில் வைத்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது–

சட்ட விரோதமாக பீடி இலைகளை கடத்திச் செல்வதாக நுரைச்சோலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், லொறியை பொலிஸார் பின்தொடர்ந்து சென்றுள்ளனர்.

அதன் பின்னர் லொறியை நிறுத்திவிட்டு, சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனவும், ரெஜிபோர்ம் பெட்டிக்குள் சூட்சுமமான முறையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 774 கிலோ பீடி இலைகளை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

அத்துடன் கடத்தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட லொறியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கடத்தலில் இருந்து மீட்கப்பட்ட பீடி இலைகளின் பெறுமதி ரூபா 46 லட்சமென மதிப்பிடப்படுகிறது.

மேலும், தப்பியோடிய சந்தேக நபர்கள் தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகளை நுரைச்சோலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அச்சுவேலி வெற்றுக்காணியில் குண்டு நேற்றுக் கண்டுபிடிப்பு!



அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அச்சுவேலி பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றிலிருந்து குண்டு நேற்று (சனிக்கிழமை) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காணியின் உரிமையாளர் காணியை சுத்தம் செய்யும்போது காணியினுள் குண்டு இருப்பது அவதானிக்கப்பட்டது.

இதனையடுத்து அச்சுவேலி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. மேற்படி குண்டை மீட்பதற்கான நடவடிக்கைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டனர்.

# கார்த்திகை மாத மரம் நடுகை முருங்கன் மத்திய கல்லூரியில்!



‘மரம் நாட்டுவோம் எதிர்கால சந்ததியைப் பாதுகாப்போம்’ எனும் தொனிப் பொருளில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் எண்ணக்கருவில் வன்னி மண் அறக்கட்டளையின் நெறிப்படுத்தலில் மர நடுகை திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு வெள்ளிக்கிழமை காலை மன்னார் முருங்கன் மத்திய கல்லூரியில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நானாட்டான் பிரதேச சபை தவிசாளர், ஆசிரியர்கள், மாணவர்கள், மன்னார் மாவட்ட வனவளத் திணைக்கள அதிகாரிகள், வன்னிமண் அறக்கட்டளையின் உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## விழித்திருந் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட அதி சொகுசு பஸ் வவுனியா, நொச்சிமோட்டை பாலத்துக்கு அருகில் நேற்று அதிகாலை 12.20 மணியளவில், வேகக்கட்டுப்பாட்டை இழந்து மதகுடன் மோதி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 3 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். 23 பேர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் அநுராதபுரம் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். காயமடைந்தவர்களில் 4 பேர் நேற்று மாலை வீடு திரும்பினர்.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவபீட மாணவியான நாவலப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த இராமகிருஷ்ணன் சயாகரி (வயது – 23), பஸ் சாரதியான கோவிலடி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ்.சிவரூபன் (வயது 32), இன்பர்சிட்டி, பருத்தித்துறையைச் சேர்ந்த இராமலிங்கம் நிதர்சன் (வயது 25) ஆகியோரே உயிரிழந்தனர்.

உயிரிழந்த முதலாம் வருட மாணவியான சயாகரி, வீடு திரும்பிக் கொண்டிருந்த போது விபத்தில் உயிரிழந்தார்.

இதேவேளை, நிதர்சன் வெளிநாடு செல்லும் பயண ஏற்பாட்டுக்காகக் கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்த போது விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

விபத்துத் தொடர்பில் காயமடைந்த வடமராட்சியைச் சேர்ந்தவர் தெரிவித்ததாவது:–

இரவு 11.45 மணியளவில் கனகராயன்குளத்தில் உணவுக்காக பஸ் நிறுத்தப்பட்டது. சுமார் 10 அல்லது 15 நிமிடங்களில் அங்கிருந்து பஸ் புறப்பட்டது. தேநீர் அருந்தி, உணவு உண்டமையால் பஸ்ஸில் பெரும்பாலானவர்கள் விழிப்பாகவே இருந்தார்கள். சுமார் 20 நிமிடத்தில் பஸ் வளைவு ஒன்றில் திரும்பியது. இதன்போது பஸ் கொஞ்சம் தளம்பியதை உணர முடிந்தது.

அந்த வளைவைத் தொடர்ந்து வந்த மற்றொரு வளைவில் மதகுடன் இதேபோன்று திரும்பும்போதே மோதியது. அந்த மதகுடன் அமைந்திருந்த நடைபாதை போன்ற ஒற்றையடி பாதையில் பஸ்ஸின் ஒரு சில்லும், மதகின் மற்றைய பக்கத்துடன் பஸ்ஸின் பின் முனையும் மோதி சாரதியின் இருக்கைப் பக்கமாக பஸ் சரிந்து விழுந்தது.

பெரும்பாலானவர்கள் விழித்திருந்தமையால் பஸ் சரியும் போதே கம்பிகளைப் பிடித்து தப்பினர். சாரதியும், பல்கலைக்கழக மாணவியும் தூக்கி வீசப்பட்டு கல்லுடன் மோதுண்டிருந்தார்கள். மற்றையவர், கண்ணாடி உடைந்து வெளியே விழுந்துள்ளார். அவர் மீதே பஸ் சரிந்து வீழ்ந்தது.

பின்னால் இன்னொரு அதிசொகுசு பஸ்ஸும் வந்தது. அதுவும் தளம்பியவாறே வந்தாலும், சாரதியின் சாதுரியத்தால் விபத்திலிருந்து தப்பித்தது. வீதியை விட்டு விலகினாலும் விபத்து ஏற்படவில்லை. அந்த பஸ்ஸில் வந்தவர்களும் உடனடியாக உதவிகளைச் செய்து எமது பஸ்ஸில் பயணித்தவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள்.

பஸ்ஸின் நடத்துநர் இளைஞர் ஒருவரே. அவர் முதல் தடவையாக இந்த பஸ்ஸில் பணியாற்றினார். அவரும் எங்களுடன் கம்பியைப் பிடித்தே உயிர் தப்பினார். சாரதி உயிரிழந்ததைப் பார்த்ததும் பயத்தால் அவர் அங்கிருந்து ஓடி விட்டார் – என்றார்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் இந்த விபத்து உள்ளடங்கலாக நேற்று மாத்திரம் 3 அதிசொகுசுப் பஸ் விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இந்த விபத்தில் மாத்திரமே பயணிகள் பாதிப்படைந்துள்ளனர். வவுனியா, நொச்சிமோட்டைப் பாலதுக்கு அருகில் விபத்துக்குளான அதிசொகுசு பஸ்ஸை மீட்கும் பணியில் நேற்றுக் காலை இராணுவத்தினர் ஈடுபட்ட போது ஏ – 9 வீதிப் போக்குவரத்து இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாகப் பாதிக்கப்பட்டது.

## போராட்டச்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

'Globe Tamil' செய்திச் சேவைக்கு அவர் வழங்கிய நேர்காணலின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் விற்பனையோ –போதைப் பொருள் பாவனையோ இருக்கவில்லை.

அவர்களின் காலத்தில் வடக்கில் போதைப்பொருள் சம்பந்தமான எந்த விதமான பிரச்சினையும் இருக்கவில்லை.

அவர்களுக்குப் பின்னர் வடக்கு மாகாணத்துக்கு இராணுவத்தினர், கடற்படையினர், விமானப் படையினர் மற்றும் பொலிஸார் பெருமளவு வந்ததன் பிற்பாடு இங்கு எந்தவிதத்தில் இவ்வளவு போதைப்பொருள் விற்பனையும் பாவனையும் கூடியது என்பது தொடர்பில் நாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த விடயத்தில் பொலிஸார் கூடுமான அளவு அக்கறை காட்டி விசாரணைகளை மேற்கொள்கின்றார்களா? அல்லது அவர்களுடன் சேர்ந்து ஏதாவது நடவடிக்கைகள் நடைபெறுகின்றனவா? என்ற பலவிதமான சந்தேகங்கள் எங்களிடத்தில் எழுகின்றன.

ஆகவே, வடக்கு – கிழக்கு மாகாணங்களை எங்களிடத்தில் ஒப்படைத்து நிர்வாகம் செய்வதற்கு – அதிகாரம் செலுத்துவதற்கு இடமளித்தால் இவற்றையெல்லாம் நாங்கள் தடுத்து நிறுத்த முடியும்.

வெளியில் இருந்து வருபவர்கள் இங்கு இருக்கும் வரையில் இவ்வாறான நடவடிக்கைகள் கூடிக்கொண்டே போகும்.

இங்கு இருக்கின்ற இளைஞர்களுக்கு இந்தப் போதைப்பொருள் பாவனையை ஊட்டி – அவர்களுக்கு அதன் ருஷியைக் கொடுத்து அவர்கள் தங்களுடைய சுதந்திரம் சம்பந்தமாக – உரிமைகள் சம்பந்தமாக – உரித்துகள் சம்பந்தமாக நடவடிக்கைகளை எடுக்காது அவர்களைத் தூங்க வைக்கும் நிலைக்கு அனுப்ப வேண்டும் என்ற நோக்குடன் இவ்வாறான போதைப்பொருள் விற்பனை இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் எனக்கு இருக்கின்றது.

அதாவது தமிழரின் உரிமைப் போராட்டம் குறித்த சிந்தனையை இளைஞர்களிடத்தில் மழுங்கடிக்கும் நோக்குடன் போதைப்பொருள் விற்பனையையும், பாவனையையும் வடக்கு மாகாணத்தில் வேரூன்றச் செய்கின்றார்களா என்ற சந்தேகம் என்னிடம் இருக்கின்றது – என்றார்.

## ஆர்ப்பாட்டங்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் தினேஷ் குணவர்த்தன.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொழும்பில் கடந்த 2ஆம் திகதி அரசுக்கு எதிராக எதிரணியினர் நடத்திய ஆர்ப்பாட்டம் படுதோல்வியில் முடிவடைந்துள்ளது என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அது உண்மைதான்.

ஆர்ப்பாட்டங்களுக்கு யார் தலைமை தாங்குவது தொடர்பில் எதிர்க்கட்சிகளுக்குள் தற்போது மோதல் ஏற்பட்டுள்ளது. அதனால்தான் எதிர்க்கட்சிகளில் ஒரு தரப்பினர் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைப் புறக்கணித்திருந்தனர்.

மக்கள் எவரும் தற்போது ஆர்ப்பாட்டம் நடத்த வீதிக்கு வருவதில்லை. எதிரணி அரசியல்வாதிகளும் அவர்களின் குடும்பத்தினரும் நண்பர்களும் தான் ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் வீதிகளில் சுற்றித் திரிகின்றனர்.

நவம்பர் 2 ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைப் பிரயோகங்கள் மேற்கொள்ளாமல் பொலிஸார் முடிவுக்குக் கொண்டு வந்திருந்தனர்.

எனவே, ஆர்ப்பாட்டங்களை நிறுத்தி விட்டு அரசுடன் கைகோர்த்து நாட்டை மீளக்கட்டியெழுப்ப முன்வருமாறு எதிர்க்கட்சிகளிடம் நாம் மீண்டும் கோரிக்கை விடுக்கின்றோம் – என்றார்.

# காலைக்கதிர் நாளிதழே காதலுடன் வாழ்த்துகிறேன்!

**ஆண்டேழில் கால்பதிக்கும் அருங்கருத்துப் பெட்டகமே**
**நீண்டநாள் நீசிறக்க செஞ்சார வாழ்த்துகிறேன்**
**காலையென்றும் மாலையென்றும் கண்ணியமாய்**
**கருத்துரைக்கும்**
**காலைக்கதிர் நாளிதழே காதலுடன் வாழ்த்துகிறேன்**

**மின்னலென ஒருபகுதி கன்னலாய் தருகின்றாய்**
**மின்னலொடு முழக்கமாய் மாரியாய் பொழிகின்றாய்**
**சொன்னவற்றைச் சொல்லாமல் சுவைபடவே சொல்லுகிறாய்**
**என்னருமை கதிருன்னை இதயமதால் வாழ்த்துகிறேன்**

**யாழிலிருந்து புறப்பட்டு நல்லசெய்தி நீதாங்கி**
**நீழுலுகம் அத்தனையும் நீசென்று நிற்கின்றாய்**
**தாழ்வுற்று சமுதாயம் போவதனைப் பொறுக்காது**
**சவுக்கடிகள் கொடுக்குமுனை தான்வியந்து வாழ்த்துகிறேன்**

**காய்தலுவத் தலின்றி கருத்துரைத்து நிற்கின்றாய்**
**காவலானாய் நீயுமே காலைமாலை வருகின்றாய்**
**பேயாகத் திரிவார்க்கு பிடித்தாணி அடிக்கின்றாய்**
**ஓயாது உணர்த்திநிற்கும் உன்திறனை வாழ்த்துகிறேன்**

**வித்தியெனும் ஆசான் எத்திசையும் பார்க்கின்றார்**
**சத்தியத்தைக் காட்டுவதில் சளைக்காமல் இருக்கின்றார்**
**மொத்தமுள்ளார் மனங்களிலும் அமருகின்ற இதழாக**
**ஆக்கிருக்கும் வித்துவத்தை அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன்**

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 4438622

